(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 10.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 பெப்ரவரி 23 புதன்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

5/2222

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்கும்போது சுவீகரிக்கப்படும் தனியார் காணிகளுக்கு நட்ட ஈடு செலுத்துவதற்கும் நிர்வாக செலவுகளுக்கும் தேவையான பணத்தொகை பொதுத் திறைசேரியினால் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு வழங்கப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவ தொடக்கம் கொடகம வரையிலான பகுதி, கொடகம தொடக்கம் அம்பாந்தோட்டை வரையிலான பகுதி, கொட்டாவ தொடக்கம் கட்டுநாயக்க வரையிலான பகுதி, மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை ஆகிய ஒவ்வொரு நெடுஞ்சாலையையும் அமைப்பதற்குரியதாக —

- (i) நட்ட ஈடு செலுத்துவதற்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட பணத் தொகை;
- (ii) இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள நட்ட ஈட்டுத் தொகை;
- (iii) செலுத்துவதற்கு எஞ்சியுள்ள நட்டஈட்டுத் தொகை;
- (iv) நட்ட ஈடு செலுத்தும் விடயத்தில் தடைகள் உள்ளதாயின் அத்தடைகள்;
- (v) செலுத்துவதற்கு எஞ்சியுள்ள நட்ட ஈட்டுத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதி;

என்பன வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

34/2022

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மூங்கில் உற்பத்தி கைத்தொழிலாளர்கள் இன்றளவில் அக்கைத்தொழிலை விட்டு ஒதுங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும்;

- (ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதிலும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றதென்பதையும்;
- (iii) மேற்படி கைத்தொழிலின் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையின் மூங்கில் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டில் அதன் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாட்டு வருமானம் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் மூங்கில் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படாத பட்சத்தில் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கையில் மூங்கில் உற்பத்திகளுக்கென சந்தையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

247/2022

கௌரவ ஹேஷா விதானகே,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சோமாவதிய, யானைக் கடவை பிரதேசத்தில் சுமார் 100 ஏக்கர் வனாந்தரப் பிரதேசம் சோளச் செய்கைக்காக துப்புரவாக்கப்பட்டு வருவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தடுப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

568/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மூலதன கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் நிதி நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனத்திற்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிதி நிறுவனத்திற்குள்ள கிளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இலங்கை மத்திய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1021/2022

கௌரவ சாந்த பண்டார,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கூட்டுறவு இயக்கம் இலங்கையில் செயற்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) கூட்டுறவு இயக்கம் இலங்கையில் தொடங்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி இயக்கம் தொடங்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் காணப்படுகின்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கூட்டுறவின் மூலம் கிராமிய நுகர்வோர் தேவைகளை உச்ச மட்டத்தில் நிறைவேற்ற முடியுமென்பதையும் அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) ஆமெனில், அப் பணியை உரிய முறையில் மேற்கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

6.

1177/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1191/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 தொற்று நோயை ஒழிப்பதற்கு தற்போது பரிசோதனை மட்டத்திலுள்ள "அவிகன்" என்ற பெயரில் தடுப்பூசியொன்றை ஜப்பான் தயாரித்திருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி தடுப்பூசி இலங்கைக்குத் தருவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) கொவிட்-19 தொற்று நோயை ஒழிப்பதற்காக உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளை மாத்திரம் இலங்கைக்குத் தருவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1310/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெயின் அளவு யாது;

(ii) இதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் வருடாந்த எல்.பீ. எரிவாயுவின் தேவைப்பாடு யாது;

(ii) மேற்குறிப்பிட்ட தேவைப்பாட்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அளவு என்பன வெவ்வேறாக யாவை;

(iii) இலங்கைக்கு எல்.பீ. எரிவாயுவினை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாது;

(iv) மேற்படி எரிவாயுவினை இறக்குமதி செய்யும் கம்பனிகள் யாவை;

(v) இலங்கையின் வருடாந்த எல்.பீ. எரிவாயு தேவைப்பாட்டில் மேற்படி ஒவ்வொரு கம்பனியினாலும் வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் சதவீதம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1468/2022

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இடைத்தரகர்கள் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் மொத்த நெல் இருப்புக்களைத் தேடி பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை 2021 ஆம் ஆண்டிற்குரியதாக முற்றுகை நடவடிக்கைகளை ஆரம்பித்த திகதி யாதென்பதையும்;

(ii) அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி முற்றுகைகளினூடாக கண்டுபிடிக்கப்பட்ட மொத்த நெல்லின் அளவு யாதென்பதையும்;

(iv) அந்த முற்றுகை நடவடிக்கைகளின்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவ்வொவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி நபர்களுக்கெதிராக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1728/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள மகாவலி திட்டத்திற்குரிய வலயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மகாவலி வலயங்களுக்குரிய கிராமங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) 2019 ஆம் ஆண்டு முதல் இது வரையில் மேற்குறித்த மகாவலி வலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

வர்த்தக அமைச்சர்,— புலமைச் சொத்து (திருத்தம்),— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்து சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 நவம்பர் 30 ஆம் திகதிய 2256/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 13 ஆம் திகதிய 2262/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 நவம்பர் 15 ஆம் திகதிய 2254/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

கமத்தொழில் அமைச்சர்,— மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்படுத்தல்) சட்டத்தின் கீழ் கட்டளை,— (452 ஆம் அத்தியாயமான) மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்படுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 யூன் 18 ஆம் திகதிய 2232/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

16.

நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.